ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>கடித எண். 15739/சா.மெ12013 –1, நாள் 18.11.2013</u>

அனுப்புநர்
திருமதி கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (இணைப்புடன்)

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புத்தமதம் தழுவிய ஆதிதிராவிடர் இன மக்களை ஆதிதிராவிடர் (Scheduled Castes) பெயர் பட்டியலில் உள்ளவர்களுக்கு சாதிச் சான்றுகள் வழங்குவது தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.1597, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 27.9.1990.
2. அரசு கடிதம் (நிலை) எண்.81, ஆதி(ம)பந துறை நாள் .19.9.2000.
3. அரசாணை (நிலை) எண்.1 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (சாமெ.1) துறை நாள் 2.1.2009.
4. திரு K.B.G. திலகர், மாநில இணை பொதுச் செயலாளர், தமிழ்நாடு SC/ST பணியாளர்கள் நலச்சங்கம், என்பவரது மனு நாள் 17.09.2013.

--------

பார்வையில் காணும் அரசாணைகளின் நகல் உடனடி பார்வைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

2. பார்வை 2ல் காணும் அரசாணையில், பிறப்பால் கிறித்துவ பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தை பின்னாளில் இந்துவாக மாறினாலும், இந்து ஆதிதிராவிடர் என சாதிச்சான்று பெறவோ, அதன் அடிப்படையில் இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகைகள் பெறுவதற்கு தகுதியில்லையென ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேற்படி அரசாணை (கடிதத்தை) எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில், நீதிப்பேராணை மனு எண்.14769/2002–ல் தொடரப்பட்ட வழக்கில், உயர்நீதிமன்றம் மேறகாண்ட ஆணையினை ரத்து செய்து உச்சநீதிமன்றத்தின் ஆணைகளின் அடிப்படையில், உரிய தெளிவுரைகளை வழங்குமாறு ஆணையிட்டது.

4. மேலே பத்தி மூன்றில் கூறப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புரை மற்றும் மைய அரசின் அறிவுரைகள் / உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் / அரசு தலைமை வழக்குரைஞர் மற்றும் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஆகியோரின் கருத்துரைகள் ஆகியவைகளை அரசு கவனமுடன் ஆய்வு செய்து பார்வை மூன்றில் காணும் அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டது:-

" ஆதிதிராவிடர் கிருத்துவ (Scheduled Caste Christians) பெற்றோர்களுக்கு மகனாக/மகளாக பிறந்த, அதாவது பிறப்பால் கிருத்துவராக இருப்பினும் (born Christians) பின்னாளில் இந்து/சீக்கியம்/புத்த மதங்களுக்கு மாறும் (Conversion) நிலையிலும் மற்றும் பிறப்பால் இந்து /சீக்கியம்/புத்த மதங்களைச் சார்ந்து இதர மதங்களுக்கு மாறி பின்னர் மீண்டும் இந்து/சீக்கியம்/புத்த மதங்களைத் தழுவும் (Re-converts) நிலையிலும் அவர்களை, அவர் சார்ந்த இனமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவர்களுக்கு ஆதிதிராவிடர் (Scheduled Castes) சாதிச்சான்று வழங்கலாம் எனவும், தற்போது இந்து /சீக்கிய/புத்த மதங்களைப் பின்பற்றும் ஆதிதிராவிடர் (Scheduled Caste) மக்களுக்கு அரசியலமைப்பின் சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் சலுகைகளை வழங்கலாம்.

5. பார்வை 1 மற்றும் 3ல் காணும் அரசாணைகள் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதாகவும், முழுமையாக நடைமுறைப்படுத்தி Scheduled Castes சான்றிதழ் பெறுவதில் உள்ள சிக்கலை தீர்க்குமாறும், பல்வேறு ஆதிதிராவிடர் நல பணியாளர்கள் சங்கத்திடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வரப்பெற்றுள்ளதை கருத்தில் கொண்டு, மேற்காணும் அரசாணைகளின்படி இந்து/சீக்கியம்/புத்த மதங்களைப் பின்பற்றும் ஆதிதிராவிடர் (Scheduled Castes) மக்களுக்கு சாதிச் சான்றும் அரசு சலுகையினையும் வழங்கத் தகுந்த மேல் நடவடிக்கையை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தங்கள் உண்மையுள்ள

ப. திருமாவளவன்
18-11-2013

அரசு செயலாளருக்காக.

<u>நகல்:-</u>

அனைத்து அரசு முதன்மைச் செயலர்/ அரசுச் செயலர், சென்னை-9.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5.
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்கள்
இயக்குநர் தேசிய ஆதிதிராவிடர் ஆணையம், சாஸ்திரி பவன்,
சென்னை-6.
திரு K.B.G. திலகர்,
தமிழ்நாடு SC/ST பணியாளர்கள் நலச்சங்கம்,
அரசு அருங்காட்சியக வளாகம்,
பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008.